[1969 செப்டம்பர் 12

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் முதலில் உட்காருங்கள்.

(திரு. க. இராமமூர்த்தி அவர்கள் எழுந்திருந்தார்கள்.)

DR. H. V. HANDE : You have allowed the hon. Leader of the Opposition to speak. So you must allow me also. He has insulted me.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைத் தலைவர் எழுந்து நிற்கும்போது உறுப்பினர்கள் அமர வேண்டும் என்ற விதியை முதலில் உறுப்பினர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். நான், எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்லியது நியாயம் அல்ல, முறையல்ல என்று குறிப்பிட்டுவிட்டேன். அதற்குப் பிறகும் டாக்டர் ஹாண்டே அவர்கள் எழுந்திருந்து பேசுவது முறை அல்ல.

டாக்டர் எச். வி. ஹாண்டே : அவர் பேசிவிட்டாரே ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது நியாயம் அல்ல, முறையல்ல என்று சொல்லிவிட்டேனே. உங்களையும் பேசவிட்டு, அது முறையல்ல என்று சொல்ல வேண்டுமா ? அப்படி நீங்களும் பேசி, அவர்களும் பேசிக்கொண்டிருந்தால், அது நன்றாக இருக்குமா ? அப்படிப் பேசிக் கொண்டே போவது முறையல்ல, நல்லது அல்ல.

திரு. கரு. சீமைச்சாமி : ஆன் எ பாயின்டு ஆப் ஆர்டர் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். பாயின்ட் ஆப் ஆர்டர் அப்புறம் ஆகட்டும். பாயின்ட் ஆப் ஆர்டர் பிறகு எழுப்பலாம்.

(2) ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(ஈ) காவிரி ஆற்றில் ஹேமாவதி இன்னும் மற்ற அணைக்கட்டுத் திட்டங்களை நிறைவேற்ற மைசூர் மாநிலம் எடுத்துள்ள முடிவும், அதனால் தமிழ்நாட்டில் சில மாவட்டங்களில் ஆயக்கட்டுதார்களும் பாசனமும் பாதிக்கப்படும் நிலையும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஹாண்டே அவர்கள் கீழ்க்கண்ட ஒற்றிவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள் :—

" I move that this House stands adjourned to discuss a matter of urgent public importance, viz., the serious situation arising in Tamil Nadu as a result of the decision of the Mysore Government to go ahead with the Hemavathi and other projects on the Cauvery river, which will result in the sufferings of the Ayacutdars n Tiruchirappalli and Thanjavur districts and the likelihood of a short fall in the agricultural production of our State."

திரு. கரு. சீமைச்சாமி அவர்கள் ஓர் ஒற்றிவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அதாவது,

1969 செப்டம்பர் 12] [பேரவைத் தலைவர்]

"மைசூர் மாநிலத்தில் காவேரிப் பாசனத்தை விரிவுபடுத்தும் நோக்கத்துடன், அணைக்கட்டுத் திட்டங்களைத் தீவிரமாக நிறைவேற்றுவது என மைசூர் அரசு முடிவு எடுத்திருப்பதால் அதனால் தமிழ் நாட்டில் எதிர்காலத்தில் பாசன சம்பந்தமாக ஏற்படக் கூடிய சிக்கல்களையும் அபாயத்தையும் பற்றி விவாதிக்க" பேரவையின் நடவடிக்கைகளை ஒற்றி வைக்கவேண்டுமென்று தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள்,

"மைசூர் அரசாங்கம் நமது மாநிலத்துக்கு வருகின்ற காவிரி நதியின் குறுக்கே மைசூர் மாநிலத்தில் பல அணைகள் கட்ட திட்டமிட்டிருப்பதால், நமது மாநிலத்திற்குக் கிடைக்கும் தண்ணீரின் அளவு குறைந்து விடுவதால் ஏற்பட்டுள்ள அவசரமும் பொது முக்கியத்துவமும் வாய்ந்த பிரச்சினையைப் பற்றி விவாதிக்க" பேரவையின் இதர அலுவல்களை ஒற்றி வைக்க வேண்டுமென்று தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. க. ப. நல்லசிவன் அவர்கள் இதைப்பற்றி ஒரு மணி நேர விவாதம் வேண்டும் என்று ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். முதல் அமைச்சர் அவர்கள் இப்பொழுது இங்கே இல்லை. அவர்கள் வந்தவுடன், அலுவல் ஆய்வுக்குழுவில், இதைப்பற்றி ஏதாவது விவாதம் நடத்தவேண்டுமா, அல்லது ஒரு அறிக்கையைப் பேரவையின் முன்வைத்து, அந்த அளவோடு திருப்தி அடைந்து விடலாமா என்பதைப்பற்றி விவாதம் செய்யலாம் என்று இருக்கிறேன். ஆகவே, இந்த ஒற்றிவைப்புத் தீர்மானங்கள் இப்பொழுது தேவையில்லை என்று கூறி, அனுமதி தர மறுக்கிறேன்.

(உ) கோவில்பட்டி, சாத்தூர் வட்டாரத்திலுள்ள சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர் சேவை தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அளித்து வந்த விற்பனை வரி விலக்கை நீக்கியதும் அதன் விளைவுகளும்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, உறுப்பினர் திரு. சோ. அழகர்சாமி அவர்கள் ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதாவது,

"கோவில்பட்டி, சாத்தூர் வட்டாரத்திலுள்ள சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர் சேவை தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 1968 மார்ச்சு வரை அளித்து வந்த விற்பனை வரி விலக்கை நீக்கி விட்டதால், இரட்டை விற்பனையால் சிறு தீப்பெட்டித் தொழிற்சாலைகள் பாதிக்கப்பட்டு 6—9—1969 முதல் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு, தொழிற்சாலை நடத்த முடியாத நிலை இருப்பதால், மீண்டும் மேற்படி சங்கங்களுக்கு விற்பனைவரி விலக்களிக்க